1987 மார்ச் 11]

கம்பெனியிடமிருந்து வாங்கி பிறகு அதை வைத்துக் கொண்டு அதேபோல் சேரன் போக்குவரத்துக் கழகம் செய்வதாகச் சொன்னார்கள்.

அந்த டைசிகான் கருவிகளை தனியார் கம்பெனியிடமிருந்து காப்பி அடிப்பதற்கு போக்குவரத்துக் கழகம் அவர்களிடமிருந்து அனுமதியைப் பெற்று இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காப்பி இல்லை. அதேபோல ஒரு பொருளைத் தயாரிக்கின்றபோது அதையே வைத்துக் கொண்டு நாம் அதில் ஆல்டர் செய்வது என்பது வேறு. அவர்கள் பேட்டர்ன் ஒன்றையும் ரிஜிஸ்டர் செய்து வைக்கவில்லை. எனவே அதைப்போல் தயாரிப்பது என்பதை ஒரு தவறாகச் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சட்டை தைத்துப் போட்டு இருந்தால் அதைப்போல ஒரு சட்டையை இன்னொருவர் தைத்துப் போட்டால் அதை வைத்துக் கொண்டு நீதி மன்றத்திற்குச் செல்ல முடியாது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலை நாயகர் அவர்களே, இந்த டைசிகான் மீட்டர்களை பொருத்துவதில் நீதி மன்றம் பேருந்துகளுக்கு தடை விதித்து இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் லாரிகளில் அதை வைத்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம் அல்லவா? ஆகவே கண்டிப்பாக வைக்க வேண்டும் என்ற ஒரு உத்திரவை மீண்டும் அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாரார் நீதிமன்றத்துக்குச் செல்லுகிறபோது அதில் தடை வருகிறபோது எங்கேயும் அதை அமல் ஆக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆனால் அரசின் நோக்கம் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போது தான் விபத்துக்களை குறைக்க முடியும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கையை அரசு வைத்து இருக்கிறது. எனவே வேகத்தை கட்டுப்படுத்துவதற்கான அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அரசு போக்குவரத்துக்கழக ஊழியர்களின் பஞ்சப்படி.

113—(*வினா எண். 8102)—திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு அரசாங்கம் அறிவித்தபடி ரூ. 1–30 விருந்து பஞ்சப்படி உயர்வு காரணமாக கொடுக்கப்பட வேண்டிய மொத்த தொகை எவ்வளவு?

(ஆ) அந்த பாக்கியை பட்டுவாடா செய்யாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

[1987 மார்ச் 11

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ரூ. 3,75,64,981.98. இவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் பஞ்சப்படி உயர்வு காரணமான பாக்கித் தொகை முழுவதையும் பட்டுவாடா செய்து விட்டன. அண்ணா போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் அரசு அறிவித்திருந்த ஓய்வூதியத் திட்டத்தில் மேற்படி நிலுவைத் தொகையை சேர்த்துக் கொள்ள விரும்பிய சில ஊழியர்கள் மட்டும் தங்களுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகையை கழகத்திடமே விட்டு வைத்துள்ளனர்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, இந்த பாக்கித் தொகையைக் கட்டாயமாக அரசிடம் கொடுக்க வேண்டுமென்ற நிர்பந்தம் நிர்வாகத் தரப்பினரிடமிருந்து, இருந்ததாக குறை கூறப்படுகிறது. அப்படி ஏதாவது நிர்பந்தம் இருந்ததா? பெரும்பான்மையான ஊழியர்களுக்கு அந்தப் பஞ்சப்படி பாக்கியைக் கொடுத்தபோது இவர்களுக்கு மட்டும் கொடுக்காமல் இருந்தது சரிதானா என்பது பற்றி அமைச்சரவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஒரு அரசு என்பது நல்ல காரியங்களைச் செய்து கொடுப்பதற்காக பொது மக்களிடத்திலே அல்லது ஊழியர்களிடத்திலே வேண்டுகோள் வைப்பதும், அல்லது அவர்களிடத்திலே கட்டாயப்படுத்துவது, இது உங்களுக்கு நல்லது என்று சொல்வதும், தவறு என்று யாரும் சொல்வார்கள் என்று கருதவில்லை. ஆனால் அதற்கு மீறியும், தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள், தொழிலாளிகள் அந்தப் பணம் தேவை என்று கேட்ட காரணத்தினாலே, யார் யார் கேட்டார்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் தடை இல்லாமல் கொடுத்தாகிவிட்டது. சில பேர் ஓய்வூதியத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று எழுதிக் கொடுத்தார்கள். அவர்களும் அந்தப் பணத்தை வேண்டுமென்று கேட்டால் நாங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அன்றைக்கே இந்த அரசு சொன்ன அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் இது ஒரு மிகப் பெரிய திட்டமாக அமலாகியிருக்கும். ஏறத்தாழ ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 500 நிலுவையில் அதிகமாக இருந்தது. அரசாங்கம் அதற்கு ஈடாக ரூ. 500 போடுவதற்குத் தயாராக இருந்தது. வேண்டாம் என்று சொல்லி அவர்கள் தட்டிக் கழித்து விட்டார்கள். இருந்தாலும் இதிலே யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை.